கும் அரசாங்கச் செலவில் அந்த வசதி செய்து கொடுக்கப்படுவதில்லை. விடுதியினரே செய்துகொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அதை யும் ஏற்றுக்கொண்டார்கள். மூன்றாவது குறைபாடு தண்ணீர் வசதி இல்லை என்பது. தண்ணீர் வசதியின்மைக்குக் காரணம் அங்கிருந்த மோட்டார் பம்பு பழுதடைந்துவிட்டதுதான். அங்கு மேயர் பம்பு தேவைப்படுகிறது. அது கல்கத்தாவிலிருந்து வர வேண்டியிருக்கிறது. அண்மையில் சில மாநிலங்களில் ஏற்பட்ட 'ட்ரவுட்' கண்டிஷனால் உடனடியாகக் கிடைக்கவில்லை. பம்பு வேண்டுமென்று கேட்டு நான்கு வாரங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் 10 அல்லது 12 நாட்களுக்குள் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப் பொழுது அந்தக் குறையும் தீர்ந்துவிடும்.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, முன் கேள் விக்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபோது, அரசியல் பிரச்னைகள் குறுக்கிடாமல் இருந்தால் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியை சென்னைக் குக் கொண்டுவருவதில் அரசாங்கம் முயற்சி செய்யலாம் என்பதாகச் சொன்னார்கள். மாணவர்களுடைய கோரிக்கை ஒரு பக்கம் இருந்தாலும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்பதாலும், அங்கே ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பிட்டல் இருப்பதாலும் அங்கிருந்து மருத்து வக் கல்லூரியை மாற்றாமலிருப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். இதிலே இரண்டு வழக்குகள் இருக்கின்றன. ஒன்று செங்கற்பட்டுக்கு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்பது. மற்றொன்று கல்லூரி மாணவர்கள் பயிற்சி பெறுவதற்குப் போதுமான நோயாளிகள் வராததால் அதைச் சென்னைக்கு மாற்ற வேண் டும் என்பது. எனவே, அங்கத்தினர் அவர்கள் போதுமான நோயாளி களை அங்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். (சிரிப்பு).

அருப்புக்கோட்டை மருத்துவ மனை.

*249 வினா.—திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அருப்புக்கோட்டையில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில் தொத்து நோய் பிரிவு (**Ward**) உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்.

(இ) தற்போது இந்தத் தொத்து நோய்ப் பிரிவு அரசாங்க மருத்துவ மனையின் ஒரு மூலையில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது.

1972 ஆகஸ்ட் 22]

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, அந்தத் தொத்து நோய்ப் பிரிவு சாதாரணமான ஒரு கூரை ஷெட்டில் இருக்கிறது. எனவே, அதை ஒரு நல்ல கட்டடம் கட்டி அதில் மாற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இம்மாதிரியான காரியங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்டு, ஆங்காங்கே ஒரு நிதிக் குழு தொடங்கி மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டிருக்கிறோம். அப்படித் தொடங்கப்படும்போது கனம் அங்கத்தினர் அவர்கள் அதற்குத் தலைமை தாங்கி நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓட்டல்களில் சுகாதாரம்

*250 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஓட்டல்களில் சுகாதாரமற்ற உணவுகள் வழங்குவதைத் தடுப்பதற்கென நடவடிக்கைகள் எடுக்கச் சொல்லி சுகாதார அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்திரவு ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஓட்டல்களில் சுகாதார நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்ளும்படி அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, ஓட்டல்களில் அரசாங்க அதிகாரிகள் போய் சுகாதார வசதிகள் சரியாக இருக்கின்றனவா என்று பார்ப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. அதனால் பண்டங்களின் தரம் மோசமானதாக இருக்கின்றன. சுகாதாரத்திற்குக் கேடு விளைவிப்பதாக இருக்கின்றன. அதிலும் எண்ணெய்ப் பண்டங்களின் தரம் மிகவும் மோசமானதாக இருக்கிறது. ஈக்கள் மொய்த்துக்கொண்டே இருக்கின்றன. இவைகளை எல்லாம் உடனுக்குடன் அதிகாரிகள் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 1954-ம் ஆண்டிலிருந்தே 'ஃபுட் அடல்ட்ரேஷன் ஆக்ட்' உருவாகியிருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் எல்லாச் சிற்றுண்டி விடுதிகளிலும், ஓட்டல்களிலும் மாநகராட்சி சுகாதார அதிகாரிகளும், நகரமன்ற சுகாதார அதிகாரிகளும் அவ்வப்போது 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க அதிகாரம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். தவிர, குறிப்பிட்ட பகுதிகளில் தொத்து நோய்கள் இருப்பதாகத் தெரிந்தால், அடிக்கடி பார்வையிட்டு, ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்க அந்த அதிகாரிகளுக்கு உரிமை இருக்கிறது. அண்மைக் காலத்தில் நம்முடைய நலத்துறை செயலாளரும், மாநகராட்சி ஆணையாளரும் சுகாதார இலாகா இயக்குநரும், கலந்து பேசி எல்லா அதிகாரிகளும்